**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.45/2021**

**நாள்.22.01.2026**

**வா.சா. 1- கிருஷ்ணசாமி**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை இடைஞ்சல் செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன். வழக்கு 1வது தபசில் சொத்தின் அளவு என்ன என்றால் 14-1/2 சென்ட். வழக்கு 1வது தபசில் சொத்து எனக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் என் சித்தப்பா என் அப்பாவுக்கு எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது. எனது சித்தப்பா பெயர் என்ன என்றால் லட்சுமணன். என் அப்பாவுக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் என் அப்பாவுக்கு 3 பேர் நான் கிருஷ்ணசாமி, மாரியம்மாள், முத்தையா பாண்டி. என் அப்பா உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை இறந்து 5 வருடங்களாகிறது. என் அப்பா இறந்த விபரத்தையும், தாவா சொத்து எனக்கு வாரிசுபடி கிடைத்தது என்பதையும் தெளிவாக வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என விடுதலை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் மாரியம்மாள், முத்தையா பாண்டியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் எந்த ஆண்டு வீடு கட்டினேன் என்றால் வீடு கட்டி 17 வருடங்கள் ஆகிறது. வழக்கு 1வது தபசில் எவ்வளவு இடத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் 7 சென்ட்டில் வீடு கட்டியுள்ளேன் மீதி இடம் காலியாக உள்ளது. வா.சா.ஆ.1 விடுதலை ஆவணத்தில் என் அப்பா,சித்தப்பாவிற்கு சொத்து எப்படிப் பாத்தியப்பட்டது என முன் ஆவணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 நத்தம் பட்டா புல எண்.1526/15, 16 மற்றும் 17 க்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 நத்தம் பட்டா புல எண்.1526/15, 16 மற்றும் 17 ல் காட்டப்பட்டுள்ள இடத்தில் தான் எங்களுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்தின் சர்வே எண்.1526/18 என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்தின் சர்வே எண்.1526/18 என்பது வருவாய் ஆவணத்தில் பூஸ்துதி நடைபாதை என உள்ளது என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்தின் சர்வே எண்.1526/20 என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்து கிழமேல் தெரு என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்து கிழமேல் தெருவுக்கு தெற்கில் கிருஷ்ணன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணன் கோவிலில் வருடாவருடம் திருவிழா நடைபெறும் என்றால் 30 வருடங்களுக்கு மேலாக திருவிழா நடக்கவில்லை.

மேற்படி கிருஷ்ணன் கோவிலில் 30 வருடங்களுக்கு மேலாக திருவிழா நடக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிருஷ்ணன் கோவிலில் வருடாவருடம் திருவிழா நடைபெறும்போது 3 வது தபசில் சொத்து கிழமேல் தெரு வழியாக வந்து வழக்கு 2 வது தபசில் நடைபாதை வழியாக ஊர்வலம் செல்லும் என்றால் சரியல்ல. 3 வது தபசில் சொத்து வருவாய் ஆவணத்தில் பூஸ்துதி தெரு என உள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 தபசில் சொத்து சம்பந்தமாக எனது பெயரிலோ, எனது முன்னோர்கள் பெயரிலோ உரிமை மூல ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2 மற்றும் 3 தபசில் சொத்தை ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதைக்காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை பிரதிவாதியின் போலிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. பிரதிவாதியின் போலிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதற்கு ஆவணங்கள் உண்டா என்றால் உண்டு தாக்கல் செய்வேன். 2 மற்றும் 3 தபசில் சொத்துக்கள் 50 ஆண்டுகளாக பொதுமக்களால் தெருவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது நான் வழக்கிற்காக பொய்யாக எனக்குப் பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.. 2 மற்றும் 3 தபசில் சொத்துக்கள் வருவாய் ஆவணங்களில் பூஸ்துதி நடைபாதை மற்றும் தெரு என உள்ளது என்பதை ரத்து செய்யவும், எனது பெயருக்கு பட்டா வழங்கவும் கோரிக்கை வைத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கக்கூடியது அல்ல, எனது வழக்கு நிரூபணம் செய்யப்படாததால் பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**
**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**<u>6 மற்றும் 7 வது பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 18:39:02 +0530